செ.வெ.எண்: 63 நாள்:26.11.2021

**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசியலமைப்பு சட்ட தினம் கடைபிடிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசியலமைப்பு சட்ட தின உறுதிமொழியினை அனைத்து துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (26.11.2021) அரசியலமைப்பு சட்ட தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசியலமைப்பு சட்ட தினம் கடைபிடிக்கப்பட்டு, அரசியலமைப்பு சட்ட தின உறுதிமொழியினை அனைத்து அரசு துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

**இந்திய அரசியலமைப்பு சட்ட தின உறுதிமொழி**

- இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும், சமநலச் சமுதாயமும், சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,
- அதன் குடிமக்கள் அனைவரும்
    - சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
    - எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
    - சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,
    - சமுதாயப் படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
    - ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,
- அவர்கள் அனைவரிடையேயும்
    - தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
    - ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
    - உடன் பிறப்புரிமையினை வளர்க்கவும்
    - உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்

என்ற இந்திய அரசியலமைப்பு சட்ட தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் கொரோனா தடுப்பு வழிமுறைகளுடன், சமூக இடைவெளியை கடைபிடித்து ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) திரு.ராஜகோபால், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக மேலாளர்கள் (பொது) திரு.சண்முகம், (குற்றவியல்) திரு.வெங்கடேசன் உட்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**